www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு : 8

தேர்வு எண் | | | | | | |

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023-24

நேரம் : 2.30 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 100

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 14X1=14

**அ)சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கற்றவருக்கு அழகு தருவது ------
 (அ) தங்கம் (ஆ) வெள்ளி (இ) வைரம் (ஈ) கல்வி
2. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ----- காரணமாக அமைந்தது.
 (அ) ஓவியக்கலை (ஆ) இசைக்கலை (இ) அச்சுக்கலை (ஈ) நுண்கலை
3. சரியான ஒலிமரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக. குயில் -----
 (அ) கரையும் (ஆ) கூவும் (இ) அகவும் (ஈ) பேசும்
4. காந்தியடிகள் ---- போற்ற வாழ்ந்தார்.
 (அ) நிலம் (ஆ) வையம் (இ) களம் (ஈ) வானம்
5. 'நன்செய்' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது –
 (அ) நன் + செய் (ஆ) நன்று + செய் (இ) நன்மை + செய் (ஈ) நல் + செய்
6. செவ்விந்தியவர்கள் நிலத்தை ------ மதிக்கின்றார்.
 (அ) தாயாக (ஆ) தந்தையாக (இ) தெய்வமாக (ஈ) தூய்மையாக
7. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ------
 (அ) தலை (ஆ) மார்பு (இ) மூக்கு (ஈ) கழுத்து
8. சமையலறையில் செலவிடும் நேரம் ------ செலவிடும் நேரமாகும்.
 (அ) சுவைக்காக (ஆ) சிக்கனத்திற்காக (இ) நல்வாழ்வுக்காக (ஈ) உணவுக்காக
9. பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று -------
 (அ) படித்தான் (ஆ) நடக்கிறான் (இ) உண்பான் (ஈ) ஓடாது
10. 'வருமுன்னர்' எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ------
 (அ) எடுத்துக்காட்டு உவமை அணி (ஆ)தற்குறிப்பேற்ற அணி
 (இ) உவமை அணி (ஈ) உருவக அணி
11. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது --------
 (அ) விளக்கு (ஆ) கல்வி (இ) விளையாட்டு (ஈ) பாட்டு
12. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ------ எனப்படும்.
 (அ) முற்று (ஆ) எச்சம் (இ) முற்றெச்சம் (ஈ) வினையெச்சம்
13. கொடுக்கப்பட்டுள்ள தொடரின் வகையைத் தேர்க.
 **நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்?**
 அ) செய்தித் தொடர் ஆ) விழைவுத் தொடர் இ) வினாத் தொடர் ஈ) உணர்ச்சித் தொடர்
14. எட்டாம் வேற்றுமை ------- வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.
 அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) விளி ஈ) பயனிலை

**II.எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 6X2=12

15. பகைவர்களிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை யாது?
16. ஓலைச் சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?
17. புயல்காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?
18. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?
19. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?
20. பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?
21. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
22. நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?
23. விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?

**III.எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 5X2=10

24. வினைமுற்று என்றால் என்ன?
25. பொருத்துக:

| | | |
|---|---|---|
| 1. நடந்து | – | அ) முற்றெச்சம் |
| 2. பேசிய | – | ஆ) குறிப்புப் பெயரெச்சம் |
| 3. எடுத்தனன் உண்டான் | – | இ) பெயரெச்சம் |
| 4. பெரிய | – | ஈ) வினையெச்சம் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

26. வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.
அ) சென்றனர் ஆ) பேசினாள்
27. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
28. உவமைத் தொடரைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.
பசு மரத்து ஆணி போல
29. இயற்கையைப் பாதுகாக்க நீங்கள் மேற்கொள்ளும் இரண்டு பொறுப்புகளை எழுதுக.
30. படத்தைப் பார்த்து, படம் தொடர்பான நான்கு சொற்களை எழுதுக.



IV. அடிபிறழாமல் எழுதுக. 4+2=6
31. "கற்றோர்க்கு" – எனத் தொடங்கும் குமரகுருபரர் பாடல் (அல்லது)
"வாழ்க நிரந்தரம்" எனத் தொடங்கும் பாரதியார் பாடல்.
32. கணைகொடிது எனத் தொடங்கும் திருக்குறள்.
V. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும் 4x4=16
33. நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளாக நீங்கள் கருதுவன யாவை?
34. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?
35. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.
36. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.
37. எழுவாய் வேற்றுமையை விளக்குக.
38. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
VI. விரிவாக விடையளிக்கவும்: 2x6=12
39. அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக. (அல்லது)
ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
40. அ) இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்க செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்? (அல்லது)
ஆ) திரு.வி.க. குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நீங்கள் எதனைக் கற்க விரும்புகிறீர்கள்?
VI. விரிவாக விடையளிக்கவும்: 1x8=8
41. அ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக. (அல்லது)
ஆ) மூளையின் வலது. இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.
VII. கட்டுரை எழுதுக. 1x8=8
42. அ) நூலகம் என்ற தலைப்பில் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுக.
முன்னுரை – நூலகத்தின் தேவை – வகைகள் – நூலகத்திலுள்ளவை – படிக்கும் முறை –முடிவுரை
ஆ) நான் விரும்பும் கவிஞர் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.
IX. கடிதம் எழுதுக. 1x8=8
43. அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.
(அல்லது)
ஆ) உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் இரண்டு நாள்கள் விடுப்பு வேண்டி வகுப்பு ஆசிரியருக்கு விடுப்பு விண்ணப்பம் ஒன்று எழுதுக.
X. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 6x1=6
44. தொடரில் 16 என்ற எண்ணுக்கான தமிழெண்ணை எழுதுக.
உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16. --------
45. கலைச்சொல் எழுதுக. Millets
46. தொடரில் உரிய இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.
திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது.
47. காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. (வினாத் தொடராக மாற்றுக)
48. சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.
உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்.
49. திருக்குறளைச் சீர்பிரித்து எழுதுக.
தக்கார் தகவிலரெ ன்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com